# கருணாநிதிக்கு வீரவாள் பரிசு கொடுத்தார் சன்ட்பத்தேசிங் பஞ்சாப்பில்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 290
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 15 றம்ழான் 19 ஞாயிற்றுக்கிழமை [30-11-69]


## மகத்தான வரவேற்பு

அமர்தசரஸ், நவ. 29

குரு நானக்கின் 500 வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்வதற்காக பஞ்சாப்புக்கு விஜயம் செய்திருக்கும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி அகாலி தலைவர் சன்ட்பத்தேசிங்கை நேற்று சந்தித்துப் பேசினார்.

திரு கருணாநிதிக்கு சன்ட் ஒரு வீரவாளைப் பரிசாகக் கொடுத்தார் சன்பத்தேசிங்கிற்கு ஒரு நடராஜர்சிலையை திரு கருணாநிதி அன்பளிப்புச்செய்தார் பெப்ரவரி மாதத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யும்படி சன்ட்பத்தேசிங்கிற்கு திரு கருணாநிதி அழைப்பு விடுத்தார்.

சன்ட்பத்தேசிங்குடன் திரு கருணாநிதி சுமார் 20 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார்

அதன் பிறகு திரு கருணாநிதி பொற்கோவிலைத்தரிசிப்பதற்காக தமது குழுவினருடன் புறப்பட்டார் வீதிகள் வழியாக அவர் காரில் சென்றபோழுது, பஞ்சாப் மக்கள் வழிகளில் திரண்டு வந்து அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள் அமிர்தசரஸ் நகர மன்றம் திரு கருணாநிதிக்கு ஏற்கனவே ஒரு வரவேற்பு அளித்தது இந்த வரவேற்பில் கருணாநிதி பேசுகையில், இங்கு பொற்கோவிலைப் பார்க்கவந்தேன் அதேசமயம் பாகிஸ்தான் தாக்குதலின்போது வீரத்தோடு நாட்டுக்காகப் போராடிய வீரம் செறிந்த பொன் போன்ற உள்ளம் கொண்ட பஞ்சாப் மக்களையும் காணமுடிந்ததுஎன்ருர்.

# மூன்று முக்கிய துறைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஞாயிறு

புகையிரதப் பகுதியைச் சேர்ந்த கார்ட்மார் யூனியனும், என்ஜின் சாரதிகள் யூனியனும், நாளை நள்ளிரவு 12 மணிமுதல் வேலை நிறுத்தத்தில் இறங்குவார்கள் வேலைநிறுத்தந்தினுல் ஏற்படும் அசௌகரியங்களை பொதுமக்கள் பொறுத்துக் கொள்ளவேண்டுமென இவ்விரு யூனியன்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சப்பள விசாரணைக் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான படியை வழங்குதில்லையென திறைசேரியும் புகையிரத நிர்வாகமும் தீர்மானித்திருப்பதால்வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கு இவ்விரு யூனியன்களும் தீர்மானித்துள்ளன நேரடி நடவடிக்கையைத்தவிர வேறு வழியில்லையென யூனியன் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

டிசம்பர் 1-ம் திகதி கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்ப்பாணம் மெயில் வண்டி வேலைநிறுத்தத்தினுல் பாதிக்கப்பட மாட்டாதென்றும் கொழும்பிலிருந்துபுறப்படும் பதுளைவண்டி நாவலப்பிட்டியில் நிறுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சம்பளக்கமிஷனின் இறுதி அறிக்கை வரும்வரைபொறுத்திருக்கும்படி ரயில்வே உதவி மனேஜர் யூனியன் உறுப்பினர்களிடம் தெரிவித்ததாகவும் போக்கு வரத்து மந்திரி திரு. ஹுருள்ளே கூறியுள்ளார்.

ஹட்டன் மாநிலம் முழுவதும் இரண்டாவது நாளாக நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த 25,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 15 தினங்களாக மேபீல்ட் தோட்டத்தில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் பொலிஸார் தலையீட்டை இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ்கண்டித்துள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்டத்தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

### இன்று பருத்தித்துறைத் தேர்தல்

## சட்டத்தை அனுசரிக்குமாறு வாக்காளர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேர்தல் ஒழுங்கு விதிகளை மீறி நடப்போர் மீது பொலிசார் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்றும் பருத்தித்துறை நகரவாசிகளுக்கு காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஏ. ஜோகிம் நேற்று உத்தரவிட்டார்.

இன்று நடைபெறும் பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் 8 வட்டாரங்களில் மொத்தம் 19 பேர் போட்டியிடுகின்றார்கள்

தற்போதைய நகரசபைத் தலைவரான திரு. நடராசா மட்டுமே அரசியல் கட்சி ரீதியில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்றார் மிகுதி அபேட்சகர்கள் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களாகவும், சுயேச்சையாளர்களாகவும் போட்டியிடுகின்றனர். தேர்தல் அமைதியாக நடைபெற வாக்காளர்களை ஒத்துழைக்குமாறு பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேர்தல் சட்டத்தையும், அதன் ஒழுங்கு முறைகளையும் அபேட்சகர்களும், பொதுமக்களும் எவ்வாறு அனுசரித்து நடக்கவேண்டும் என்பது பற்றி அபேட்சகர்கள் அனைவரையும் காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஏ. ஜோசிம் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விளக்கம் கொடுத்தார்.

(கா. நி)

தொழில் நுட்பகல்லூரியில்

### ஆஸ்பத்திரி

## ஆய்வுகூட ஊழியர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி ஆய்வு கூட தொழில் நுட்ப ஊழியர்கள் நேற்று இரண்டாவது தினமாகதொடர்ந்துவேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள பரிசோதனை அறை நேற்று பூட்டப்பட்டிருந்தார்.

காங்கேசன்துறைமந்திகை ஊர்காவற்றுறை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிகளிலும், ஆய்வுகூடதொழில் நுட்ப ஊழியர்கள்வேலைநிறுத்தம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

நாடுமுழுவதும் இவ்வூழியர்கள் நேற்று தொடர்ந்து

## வேதங்கள் ஆகமங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்

### நாவலர் விழாவில் கோப்பாய் எம். பி.

கோப்பாய், சனி

''வேதங்கள், ஆகமங்கள், உபநிஷத்துக்கள் என்பவை சைவத்தின் மூல நூல்கள். அவை சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், இலட்சியங்களையும், கருத்துக்களையும் எடுத்துக் கூறுபவை. வேற்றுமொழிகளில் அத்தகைய நூல்கள் இருப்பதனுலேயே தமிழ்மக்கள் அவற்றைக கற்றுணர்ந்து அதன்படி ஒழுக முடிவதில்லை'' எனவே அவை தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தவசியம்.'

கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் கருத்துரை வழங்குகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர் இவ்விழா, ஆசிரியர் திரு ஏ பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

திரு கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசியதாவது: நாவலர்காலத்திலேஅன்னியராதிககத்தின்கீழ் சைவர்கள் பிழையான காரணங்களுககாக மதம் மாறினர்கள். அதேநிலை இன்று மீண்டும் உருவாகின்றது குறிப்பிடத்தககது. அன்றைய நிலையில் நாவலர் அரசாங்கத்துடன் சேர்ந்து சமயமாற்றத்துககாகப் போராடினர் ஆனல் இன்று அரசாங்கமே சைவர்களை மாற்றஞ்செய்யும் நிலைககு வந்துள்ளது அரசாங்கத்தை இச்சூழ்நிலைககாக எதிர்த்துப்போராட வேண்டிய அடிப்படைச் சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்ற உண்மையான சிந்தனையுடன் தொண்டாற்றியவர்''.

கோப்பாய் கிராமசபை தலைவர் திரு.ரி.பரமானந்தராசா கூறியதாவது:

நாவலர் சமய சேவையுடன் தன்தொண்டை நிறுத்திவிடவில்லை. சமயத்தின் மூலம் சுகாதாரத்தையும் வளர்த்தார். பொருளாதாரம், நாட்டின் ஜீவநாடி என்பதை உணர்ந்து அவைக்காகத் தொண்டாற்றிய பெருமகன்.''

## சென்னைக் கோஷ்டியின் யாழ்ப்பாண விஜயம்

மல்லாகம், சனி

சென்னை றெயில்வே உதைபந்தாட்டக் கோஷ்டியினர் வெள்ளிக்கிழமைமாலை 5-40 மணிக்கு விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். பலாலி விமான நிலையத்தில் மயிலிட்டி கிராமசபைத்தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி, கோஷ்டி மனேஜர் திரு. இராமநாதன் கோஷ்டிக் காப்டன் ஆகியோருக்கு மலர் மாலை அணிந்து வரவேற்ருர். இலங்கை உதைபந்தாட்டச் செயலாளர் திரு வீ கே ஆறுமுகம்யாழ்உதைபந்தாட்டச் சங்கப் பிரதிநிதிகள் திருவாளர்கள் பாலசுப்பிரமணியம் குமரையா ஆகியோரும் கோஷ்டி வீரர்களை வரவேற்றனர். பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னை வீரர்கள் மோட்டார்கார் மூலம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்,

## அனுராதபுரத்துக்கு பொதுச்சந்தை

## திருமலை நகரசபையின் இலவச திரைக்காட்சி

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை நகரசபையில் சினிமாப்படம் காட்டும் புரொஜெக்டர் கருவி ஒன்றை வாங்குவதற் பட்டின சபை எல்லைக்குள் இருக்கும்பொதுமக்களுக்கும் இலவசமாகக் காட்டப்படுமென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போட்டியிடுகின்றார்கள்

தற்போதைய நகரசபைத் தலைவரான திரு. நடராசா மட்டுமே அரசியல் கட்சி ரீதியில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்றார் மிகுதி அபேட்சகர்கள்

... திரு. ஏ. ஜோசிம் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விளக்கம் கொடுத்தார். (கா. நி)

... ஆஸ்பத்திரி ஆய்வு கூட தொழில் நுட்ப ஊழியர்கள் நேற்று இரண்டாவது தினமாக தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள பரிசோதனை அறை நேற்று பூட்டப்பட்டிருந்தது இரத்தம், மலம் சலம், பரிசோதனைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்

... ஊர்காவற்றுறை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிகளிலும், ஆய்வுகூட தொழில் நுட்ப ஊழியர்கள்வேலைநிறுத்தம் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

நாடுமுழுவதும் இவ்வூழியர்கள் நேற்று தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதாக ஊழியர் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

... கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்டத்தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

... தக்கது. அன்றைய நிலையில் நாவலர் அரசாங்கத்துடன் சேர்ந்து சமயமாற்றத்துக்காகப் போராடினர் ஆனால் இன்று அரசாங்கமே சைவர்களை மாற்றஞ்செய்யும் நிலைக்கு வந்துள்ளது அரசாங்கத்தை இச்சூழ்நிலைக்காக எதிர்த்துப்போராட வேண்டிய நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம் இந்த நிலையில் நாவலர் காட்டிய வழியே நமக்குத் தேவைப்படுகின்றது அவ்வழியேபின்பற்றப் படவேண்டும் மக்களின் ஆத்மவாழ்க்கைக்குவழிகாட்டிய நாவலர் சமுதாயத்தின் அரசியல், பாரம்பரியம் சுதந்திரம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் சுதந்திரத்துக்காக சமய ஆத்மீக இயக்கத்தை உருவாக்கிப் பாராடினர். அவர் தனிப்பட்ட ஒரு சமுதாயத்துக்கு தொண்டாற்றியவரல்லர். மனித சமுதாயம் முழுதும்

தொழில் நுட்பகல்லூரியில்

## தெரிவு செய்யப்பட்டது 20 எடுக்கப்பட்டது 10?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கனிஷ்டதொழில் நுட்பக் கல்லூரியில் வானொலிப்பேணல் பயிற்சி நெறி வகுப்பு நேர்முகப் பரீட்சைக்குவழக்கம்போல் 20பேரை தெரிவு செய்துவிட்டு பின்னர் 10 பேரைமட்டும் எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக யாழ். இளைஞர் கழகத் தலைவர் திரு. ஆர். இரத்தின கோபால் தலைமையில் சென்ற தூது கோஷ்டி ஊர்காவற்றுறை எம். பி. திரு, வ. நவரத்தினத்தை சந்தித்து, வானொலி பேணல் வகுப்பில் காலியாக இருக்கிம் 10 இடங்களையும், மீண்டும் பரீட்சைவைத்து எடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டது அத்துடன் யந்திர தளப்பயிற்சியையும் காலதாமதமின்றி ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் வற்புறுத்தியிருக்கிறது.

வடமாநில வித்தியாபதியுடனும், தொழில்நுட்பக் கல்லூரி அதிபருடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக ஊர்காவற்றுறை எம் பி. திரு. வ. நவரத்தினம் தூது கோஷ்டியிடம் தெரிவித்தார்.

யாழ். இளைஞர்கழகத்தலைவர் திரு. இரத்தினகோபால் இவ்விஷயமாக கனிஷ்ட தொழில்நுட்பகல்லூரிஅதிபரோடு தொடர்பு கொண்டபொழுது. 10பேர்தான் மேற்படி வகுப்பிற்கு தகுதியுள்ளவர்களெனப் பதில் கிடைத்ததாக அறியப்படுகிறது.

மது போதையில்

## தண்டவாளத்தில்நித்திரை செய்தாராம் நெரியுண்டு மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மதுபோதையில் தண்டவாளத்தில் தலையை வைத்து நித்திரை கொண்டதாகக் கூறப்படும் 35 வயது நபர் ஒருவர் ரயிலினுல் நெரியுண்டு மண்டை சிதறி மரணமானுர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை அநுராதபுரத்துக்கும் தலாவைக்குமிடையில் நடைபெற்றதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த யாழ்தேவியில் நடைபெற்ற இவ் விபத்தில் திக்கிரிபண்டா என்பவரே இவ்வாறு நெரியுண்டு மரணமானவராவார்.

மரணமானவர் மது போதையில் ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து நித்திரை கொண்டதாகவும், ரயில் 'கோனை' அடித்தும் அவர் எழும்பவில்லை என்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. புகையிரத சாரதி பி. ஏ. ஜெசெய்னே, தலைமைக் கார்ட் பி. கனகசபாபதி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எம். முதியான்சே விசாரணை நடத்திஞர். (கா. நி.)

## அன்புவழிபுரத்துக்கு பொதுச்சந்தை

திருக்கோணமலை, சனி

அன்புவழிபுரத்தில் விரைவில் ஒரு பொதுச்சந்தை நிறுவுவதற்கு நகரசபை தீர்மானித்துள்ளது திருமலை நகரசபையின் இவ்வாண்டு வரவு - செலவுத்திட்டத்தில் அன்புவழி புரத்தில் ஒட் பொதுச்சந்தை அமைப்பதற்கு பணம் ஒதுக்கப்படுடுள்ளது.

## வர்த்தக வங்கி கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வர்த்தக வங்கி யாழ்ப்பாணக் கிளைக்கோஷ்டிக்கும் மக்கள் வங்கி யாழ்ப்பாணக் கிளைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வர்த்தக வங்கி கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றிபெற்றது.

செல்வரெட்ணம் இரு கோல்களையும் கதிர்காமதாசன் ஒரு கோலையும் போட்டனர். திரு தி. ரகுநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## இடைத்தேர்தல் முடிவு

திருக்கோணமலை, சனி

சாம்பல்தீவு கிராமசபையின் 6-ம்வட்டார இடைத் தேர்தலில் செல்லையா சின்னராசா என்வர் அங்கத்தவராகத்தெரிவுசெய்யப்பட்டார்.

## நாய்களால் பயிர் நாசமாம்

கோப்பாய், சனி

கோப்பாயிலுள்ள மறியற்சாலைக்காரர்களின் தோட்டத்தில் தினமும் நாய்களின் தொல்லைகள் அதிகரித்துவருகின்றனவாம். சமீப நாட்களாகத் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த உருளைக்கிழங்குகளை இரவு நேரங்களில் நாய்கள் நாசம்செய்கின்றனவாம்

இதுகுறித்துச் சம்பந்தப்தப்பட்டவர்கள் கோப்பாய் கி. ச. தலைவரை உரிய நடவடிக்கைகளை எடுககுமாறு கேட்டுள்ளனர்

## இலவச திரைக்காட்சி

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை நகரசபையில் சினிமாப்படம் காட்டும் புரொஜெக்டர் கருவி ஒன்றை வாங்குவதற்காகக் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்புரொஜெக்டர் மூலம் வெளிநாட்டுக் காரியாலயங்களில் இருந்தும், இலங்கைத் திரைப்படப் பிரிவிடமிருந்து பெறப்படும்படங்களை வாராவாரம் நகரசபை மண்டபத்தில் இலவசமாக பொதுமக்களுக்கு காட்டப்படவேண்டுமென்றும், மாதமொருமுறை திருமலைக்கடற்கரையிலும், அன்புவழிபுரம்லிங்கநகர், மிகிந்தபுரம் ஆகிய பட்டின சபை எல்லைக்குள் இருக்கும்பொதுமக்களுக்கும் இலவசமாகக் காட்டப்படுமென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## நியமனம்

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை சமயத்தொண்டரும் சமூகசேவையாளருமாகிய திரு. என். நடராசா மூளாய்கூட்டுறவு ஆஸ்பத்திரியின் நிர்வாக சபையின் அங்கத்தராக மேற்படி ஆஸ்பத்திரியின் நிர்வாகசபையினரால் இம்மாதம் 19-ம் திகதிதொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மொழிக்கும் சமயத்துக்கும் எழுச்சியை ஏற்படுத்தியவர்

சுழிபுரம், ஞாயிறு

''தமிழ்மொழிக்கு ஓர்விழிப்பையும் சைவசமயத்துக்கு ஓர் எழுச்சியையும் உண்டு பண்ணியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலராவார் நாவலர் காலத்துக்கு பின்னர் ஏற்பட்ட நல்லவற்றைஎல்லாம் நாம் கைக்கொள்ள வேண்டும். இன்று நாடும் ஏடும் போற்றும் நாவலர்கருத்தை அவர் புகழை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் தக்க வகையில் பரப்பிவருகின்றனர். சபையினருடைய அரும் பணியால் நாவலர் நாமம் பலரின் மனதில் குடிகொண்டுள்ளது அண்மைக் காலத்தில் நாவலருக்கு எடுக்கப்பட்ட பெரும் விழாக்கள் மக்கள் மனதில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளன தேசிய ரீதியில் சமயப்பணி தமிழ்ப் பணி இரண்டையும் நாவலர் கைக்கொண்டதனுல் தான் இன்று நல்ல சமய சீலர்களையும், நல்ல தமிழ் மொழிநூல்களையும் திறமை மிக்க பேச்சாளர்களையும் காணமுடிகின்றது''.

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நாவலர் வாரத்தையொட்டி கொண்டாடப்பட்ட நாவலர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. கா. நடராசா குறிப்பிட்டார்.

விழாவுக்கு திரு.க. வாமதேவன் தலைமை வகித்தார். கூட்டுப்பிரார்த்தனை, விசேட பூசை ஆகியன நடைபெற்றன. திரு. கா. நடராசா. மேலும் பேசுகையில் கல்விப் போதனைக்காக பாடசாலைகளை நிறுவி நடாத்தியதன் மூலம் ஒரு தேசிய வீரனுகத் திகழும் பேறு நாவலர் பெற்றுள்ளார் என்றுர்.

### தேடுகின்றனர்

ஊரதீவு. வெள்ளி

ஊர்காவற்றுறை துறைமுகத்தில்வேலைசெய்தகண்டியைச் சேர்ந்த மைக்கல் என்ற வாலிபர் கடலில் தவறிவிழுந்துவிட்டார்.

பின்லாந்து எபனேசர் மிஷன் கப்பலில் வேலை செய்த இவர் அண்மையிலே வேலைக்குச் சேர்ந்ததாகத் தெரியவருகிறது

கடலில் தீவிர தேடுதலை நீர்மூழ்கிகள் நடாத்தியும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# '2-வது எதிரி சுட்டார்; 3-வது எதிரி வாளால் வெட்டினுர்'

## வல்வை ஊரிக்காடு கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''வாருங்கள் சுடு என்று இரண்டாவதுஎதிரி சொல்ல முதலாம்எதிரி இறந்த இரத்தினசிங்கத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். சூடு வாங்கியதும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு 'ஐயோ சுட்டுப் போட்டாங்கள்' என்று சொல்ல 3ம் எதிரி அவருக்கு முதுகில் வாளால் வெட்டினுர். என வல்வெட்டித்துறை ஊரிக்காட்டைச் சேர்ந்த விவசாயியான கந்தையா தேவராசா என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

இவ் வழக்கு ஊரிக்காட்டைச் சேர்ந்த வே. சிவச்செல்வச்சந்திரன், சி. இராசதுரை, க. பரமானந்தம், த. தேவராசா, இ. துரைராசா ந. தர்மகுலசிங்கம், சி. நற்குருராசா, க சர்வானந்தம் ஆகியோர் கடந்த ஐப்பசி மாதம் 12-ந் திகதி அதே இடத்தைச்சேர்ந்த சு. இரத்தினசிங்கத்தை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாகவும். க தேவராசாவுக்கு சுட்டுபடுகாயம் உண்டு பண்ணியதாகவும் வல்வெட்டித் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

தேவராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எதிரிகளை 8,10 வருடமாகத் தெரியும். சம்பவ தினம் காலை 9 மணிக்கு வீட்டில் இருந்தேன். அந் நேரத்தில் இறந்த இரத்தினசிங்கம், குலேந்திரலிங்கம், தவராசா, அழகையா ஆகியோர் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் என்னை நொத்தாரிஸ் காட்டுக்கு கொத்துவதற்காக கூட்டிக்கொண்டுபோக வந்தனர். எனது வீட்டிலிருந்து அக் காணி அரை மைலுக்கு மேல் இருக்கும். நாங்கள் மண் வெட்டியுடன் ஒற்றையடிப் பாதையால் சென்று வண்டிப்பாதையைச் சேரும் போது எதிரிகள் வண்டிப் பாதையில் நின்றுர்கள். கிழக்குப் பக்கமாக நின்ற 2 வது எதிரி வாருங்கள் சுடு என்று சொல்ல 1ம் எதிரி எனக்கு முன்னுக்குச் சென்ற இறந்த இரத்தின சிங்கத்தைச் சுட்டார். அவர் வயிற்றை பிடித்துக்கொண்டு ஐயோ சுட்டுப் போட்டாங்கள் என்று சொல்லி திரும்ப 3ம் எதிரி வாளால் முதுகில் வெட்டினுர். அதைத் தொடர்ந்து நான் 3 வது எதிரியை மண் வெட்டியுடன்துரத்தினேன். அப்போ 1ம் எதிரி என்னை நோக்கிச் சுட்டார். அதனுல் நெஞ்சில்காயம்ஏற்பட்டது. நான் சரிந்து விழுந்து விட்டேன் மயக்கம் வந்தது- யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்டாக்டர் என்னைபார்வையிட்டார் பொலிசுக்கும் வாக்குமூலமளித்தேன்.

டாக்டர் எம் அருமைநாயகம் சாட்சியமளித்த பின் மேல்விசாரணை அடுத்த மாதம் 6-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## நகரசபை நடவடிக்கை

திருக்கோணமலை, சனி

திருமலை நகரசபையின் பொதுத்தண்ணீர் பைப்புக்களில் கார், டாக்ஸி, மோட்டோர் வாகனங்கள் கழுவுகின்றவர்கள் மீதுநடவடிக்கை எடுப்பதற்கு சட்டம் வருகின்றது.

இதுவரை காலமும் பொதுத்தண்ணீர் பைப்புக்களில் மோட்டார் வாகனங்களைக் கழுவுபவர்கள் மீது பொலிசாரால் எதுவிதநடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருந்ததென்றும் இனிமேல் நகரசபை மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நகரசபை தீர்மானித்துள்ளது.


தற்பொழுது அச்சில்...

ஏராளமான தகவல்கள்

நவீன அமைப்பு

ஈழநாடு

தினக் குறிப்புகள்

1970

★ ஈழநாடு POCKET DIARY (one week to an opening) 75 சதம்

★ ஈழநாடு மாணவர் தினக்குறிப்பு ரூபா 1-15 சதம்

★ ஈழநாடு தினக்குறிப்பு (வழமையானது) ரூபா 1-35 சதம்

'ஈழநாடு' பத்திரிகை ஏஜண்டுகளுக்கும் வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகள் தரபபடும்.

விபரங்களுக்கு:

தினக் குறிப்பு 1970,
த. பெ. எண். 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### நன்றி நவிலல்

ஏழாலை மேற்கு சபாபதி எள்ளுப்பிள்ளையின் மரணச் சடங்கிற் கலந்துகொண்டவர்களும் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுமாகிய நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் அன்னாரின் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் எல்லோரும் தங்கள் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறார்கள் தனித்தனி நன்றியறிதற் கடிதங்கள் அனுப்ப இயலாமைக்கு மன்னிப்புக் கோருகிறார்கள். ச. தம்பாபிள்ளை, P. W. D. ஓவசியர், பத்தனை, ச. சுந்தரம், இந்திரபவான், சுன்னாகம். 1580

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சயிக்கிள் மூலம் பத்திரிகை விநியோகம் செய்ய ஆட்கள் தேவை. மாதச்சம்பளம் ரூபா 135/- பத்திரிகை விநியோகம் செய்யும் நேரம் காலை 6 மணி முதல் 10-00 மணி வரை. பிணைப்பணம் ரூபா 1000/- 23 வயதுக்குட்பட்டவர்கள் 6-12-69ந் திகதிக்கு முன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். வி. எம். கே., 45, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1576

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு. 1969டிசம்பர் பரீட்சை G. C. E. (O/L) சரித்திர பாட வழிகாட்டிவிஞ-விடை இரண்டாம் பகுதி விலை 3'ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1573

காணி:

181-ம் கட்டை கண்டி ரோட் மிருசுவிலில் 24 பரப்பு பிரயோசனந்தரும், தென்னைகளுடன், A. S. சங்கரப்பிள்ளை கடைக்கு சமீபமாக கந்தையா சரவணமுத்து வீட்டுக்குப் பக்கத்தில் தொடர்பு கொள்ளவும் திருமதி சி. ஆறுமுகம், தில்லைவாசா, பிள்ளையார் கோவிலடி கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை 1575

### தேவை

G. C. E. உயர்தரத்தில் சரித்திரம், புவியியல், ஆட்சியியல், பொருளாதாரப் பாடங்கள் இரண்டிலேனும் சித்தியடைந்து தமிழில் உறுப்பமைய எழுதக்கூடியவர் தேவை. தகுதிக்கேற்பச் சம்பளம். எழுத்தில் விண்ணப்பிக்குக. இ. தர்மலிங்கம், புன்னாலைக்கட்டுவன். 1577

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# டெற்றோல்
## பாவித்து
## உங்கள்
## குடும்பத்தைப்
## பாதுகாருங்கள்


THE JAFFNA ACADEMY
Chundikuli, Jaffna
Phone No. 617.

1970 - Sessions commence on 3rd January 1970. SPECIAL PRACTICAL CLASSES for U. E. Students sitting for the December 1969, Examination will commence on 15th December 1969. 2 Practicals per Supject per week.

DIRECTOR
1840

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்விப்பத்திர அறிவித்தல்

1970ஆம் ஆண்டுக்கு மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்படும் பிரசவ விடுதிகளில் அழுக்குத் துணிகளை சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 14-12-69ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை 13-12-69ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

3. இதன் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து அல்லது மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரம் பற்றிய ஏனைய சகல விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்:
ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
27-11 69. 1849

## செண் ஜேம்ஸ் வெற்றி

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை செண். ஜேம்ஸ் கோஷ்டிக்கும் பண்டத்தரிப்பு பாத்திமா கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இளவாலை செண். ஜேம்ஸ் கோஷ்டியினர் 7 கோல்களைப் போட்டனர். பாத்திமா கோஷ்டியினர்

## தேவை

நுணாவில் மேற்கு ஜோதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்.

1 முகாமையாளர்
2 விற்பனையாளர்

1 முகாமையாளர்:
(அ) வயது 18—30
(ஆ) தராதரம்: 1 க. பொ. த. பத்திர வகுப்பு 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2 கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலைத் தராதரம் பெற்றிருத்தல்.
(இ) சம்பளம்: மாதவீதம் ரூபா நூறு.
(ஈ) பிணை: உரொக்கம் ஆயிரம் ரூபா. ஆதனம் இரண்டாயிரம் ரூபா

2 விற்பனையாளர்:
அ) வயது 18—30
(ஆ) தராதரம் விற்பனவுப் பயிற்சி
(இ) சம்பளம்: மாதவீதம் ரூபா அறுபது
(ஈ) பிணை உரொக்கம் ஐந்நூறு ரூபா
ஆதனம் ஐந்நூறு ரூபா

விண்ணப்பங்கள் 15-12-69க்குமுன் பதிவுத்தபால்மூலம் மேற்படி சங்கத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பட வேண்டும்.

விலாசம் திரு. எஸ். எஸ் முத்தையா- தலைவர் நுணாவில் மேற்கு ஜோதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி.

இங்ஙனம்
தலைவர்
ஜோதி பலநோக்கு
கூட்டுறவுச்சங்கம்
நுணாவில் மேற்கு
சாவகச்சேரி
28'11-69

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

மல்லாகம், சனி

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் நடாத்தும் 12-வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

முதற் பிரிவு இரண்டாம் பிரிவு என இரு தரப்பினருக்கும் நடாத்தப்படவிருக்கும் இச்சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த எந்த விளையாட்டுக் கழகம், கிராம முன்னேற்றச் சங்கம் சன சமூக நிலையம் ஆகியனவும் கலந்துகொள்ளலாம்

## தொல்புரம் கோஷ்டி வெற்றி

[illegible] சனி

தொல்புரம் [illegible] சன சமூக உதைபந்தாட்டக்

## பொலிஸ் வென்றது

பருத்தித்துறை, சனி

வல்வை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் நடந்த அகில இலங்கை கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பொலிஸ் கோஷ்டியும் வல்வை வானவில் கோஷ்டியும் மோதிக்கொண்டபோது பொலிஸ்3-2 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

பொலிஸ் கோஷ்டியில் பெரேரா, பெர்னாந்து ஆகியோரும், வல்வைக்கோஷ்டியில் தங்கவேலுவும் சிறப்பாக விளையாடினர்.

திரு.கே.எஸ். சிதம்பரநாதன் மத்தியஸ்தம்வகித்தார்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### ஞாயிறு 30—11—69

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.
பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஒடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 முஸ்லிம்நிகழ்ச்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-15 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


## வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**பாகப்பிரிவினை**

4-30 p. m Only
Prepoya & Poya 10-30 a m.
Georges Riviere,
Diana Martin
in
MINNESOTA CLAY
(English)

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
BOB
&
SALLY
(Strictly for Adults)

## வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தென்னகத் திரைகளில்
100 நாட்களுக்கு மேல்
ஓடிய வெற்றிச்சித்திரம்
**எதிர் நீச்சல்**

## மனோகரா
யாழ்ப்பாணம்
காமினி பொன்சேகா
ருக்மணி தேவி, ஜயகாந்த்
நடிக்கும்
**பாராவலலு**
(சிறந்த சிங்களச் சித்திரம்).

வல்வெட்டித்துறை
## றஞ்சனா தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30.
நம்பியார் - ஆனந்தன்
பத்மினி
நடித்த
**நீயா நானா?**

## ராக்ரர் விற்பனைக்கு

25 ஸ்ரீ 6000 தொடர் இலக்க "போட் 4000" ராக்ரர் உடன் விற்பனைக்கு உண்டு. பார்வை இட்டு விலை கோரவும்.

ராஜா கோப்பரேஷன்,
கண்டி ரோட்,
பரந்தன்.
1839

## ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
முத்துராமன்-வாணிஸ்ரீ
நடித்த
**டீச்சரம்மா**
முக்கிய கவனிப்பு
மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்

## REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poya, Pre-poya 4 Shows
Phil Silvers,
Kenneth Williams
in
FOLLOW THAT CAMEL

## ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனு
நடித்த
# குலவிளக்கு

இப்பொழுது நடைபெறுகிறது
## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ சோ
★ ஆனந்தன்
★ குமாரி சச்சு
★ மனோரமா
★ தேவகி

நடித்த
முக்தா பிலிம்ஸாரின்
# நினைவில் நின்றவள்

| இசை | கதைவசனம் | டைரக்ஷன் |
|---|---|---|
| வி. குமார் | சோ | வி சீனிவாசன் |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாருங்கள்



**வெட்டுகள், புண்கள், சவரக் காயங்கள் அடிக்கடி ஏற்படுவன. கிருமிகள் இலகுவாகத் தொற்றக் கூடிய அவை, ஆபத்தில் முடியக்கூடும்.**

சருமத்தில் விழும் மிகச் சிறு கீறல் மூலம் கூட ஆபத்தான கிருமிகள் உங்கள் உடம்பில் நுழைந்து நோயும் நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும்.

உங்கள் குடும்பத்தைக் காக்க, கிருமிகளை விரைந்து கொல்லும் டெற்றோல் பாவியுங்கள்.

டெற்றோலை -

* வெட்டுகள், புண்கள், சவரக் காயங்கள்,
* பூச்சிக் கடிகளுக்கும்,
குளியல் தொட்டியிலும்,
* மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கும், துர்மணம் உண்
* டாக்கும் கிருமிகளைக் கொன்று சுத்தம் ஊட்ட வல்ல தாகையால் துர்மணமகற்றவும், பாவியுங்கள்.
* முதலில் டெற்றோல் தேக நோய்த் தொற்று நாசினியெனினும், கழுவு தொட்டிகள், குளியல் தொட்டிகளையும், தரையையும், குறிப்பாக வீட்டில் நோயாளர் உள்ள வேளைகளில் தொற்றுக் கிருமியற்றிருக்கச் செய்யவும் அது வாய்ப்பான துணை.



டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்றோல். ஏனெனில், பொதுவாக நோய்களைப் பரப்பும் சகல வித கிருமிகளையும் விரைந்து கொல்லும் நம்பகமான தொற்று நாசினி அது என்பதை அவர்கள் அறிவார்கள். உங்கள் குடும்பத்தைத் தொற்று நோயிலிருந்து காக்க, அவர்களைப் பின்பற்றி, உலகின் அதி நம்பகம் வாய்ந்த தொற்று நாசினியான டெற்றோல் பாவியுங்கள்.

FB/014 ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


இளவாலை சென். ஜேம்ஸ் கோஷ்டிக்கும் பண்டத்தரிப்பு பாத்திமா கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இளவாலை சென். ஜேம்ஸ் கோஷ்டியினர் 7 கோல்களைப் போட்டனர். பாத்திமா கோஷ்டியினர் 1 கோல்மட்டும் போட்டனர்.

## எக்ஸ்போ 70-ல் இலங்கைப் பொருட்கள்

கோட்டை, சனி

அடுத்தாண்டு ஜப்பானில் நடைபெறவிருக்கும் எக்ஸ்போ 70 பொருட்காட்சியில் இலங்கை நூதனசாலையிலுள்ள சில பொருட்களும் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன

...வும் கலந்துகொள்ளலாம்

## தொல்புரம் கோஷ்டி வெற்றி

சுழிபுரம், சனி

தொல்புரம் மத்திய சனசமூக உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், மூளாய் இளைஞர் சங்க உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய கோஷ்டியினர் 3 - 1 கோல்களால் வெற்றிபெற்றனர்.

போட்டி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

1839 ராஜா கோப்பரேஷன், கண்டி ரோட், பரந்தன்.

வி. குமார் சோ வி சீனிவாசன்

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

கார்த்திகை மாதம் 15-ம் திகதி (30-11-69)

**மேஷம்-** -அறவழியை நாடுவீர்கள். தெய்வ சிந்தை மேலோங்கி நிற்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை தென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

**ரிஷபம்-** வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள் நீண்டநாள் கனவு இன்று நனவாகும். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்-** குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். திடீர் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம். மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கடகம்-** கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் சிலருக்கு பதவி உயர்வு ஏற்படலாம். வெளியிடத்துத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும் நீண்டநாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

**சிம்மம்-** இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். நீண்ட நாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானிய விருத்திக்கும் இடம் உண்டு.

**கன்னி-** துன்பத்தின் ரேகைகள் படரும், எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றி மறையும்.

**துலாம்-** விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடம் உண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக்கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள். சிறப்பான தினம்

**விருச்சிகம்-** புத்திரவழியால் புகழ்வந்து சேரும். வெளியூர்ப் புதினமும் உண்டு குடும்பத்தில் சுமூகமான நிலை தென்படும். புதிய தொடர்புகள் ஏற்படும். அதன்வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

**தனுசு-** மதிப்பு உயரும் இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னைகளையும் பேச்சு வன்மையினால் சமாளித்து விடுவீர்'

**மகரம்-** சமயோகித புத்தி உங்களுக்கு தாராளமான சித்திகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

**கும்பம்-** ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம் வேண்டும்.

**மீனம்-** பூமியால் இலாபம் உண்டு. புத்திரர் புகழும் சேரும், பொதுசபைத் தலைமைக்கான வாய்ப்புங்கிடைக்கும், உடல்நலம் பாதிக்கப்படக்கூடுமாகையால்வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்,





இதனால் பணம் மிஞ்சுகிறது, நீடிய காலம் நிலைக்கிறது, பொருத்த இலகுவாகிறது, கூலிச் செலவைக் குறைக்கிறது

நீங்களும்

வேய்தல், அடைத்தல் மற்றும் வேலிகளுக்கு

**றிவர் பிறாண்ட்**

கல்வனைஸ்ட் தகடுகளையே உபயோகிக்க ஆரம்பியுங்கள்.

உங்களுக்கு அண்மையிலுள்ள இரும்புப் பொருள் வியாபாரியைக் காணுங்கள்.

இலங்கை கல்வனைசிங் இண்டஸ்ட்றீஸ் லிமிட்டெட்
450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காஸிய நெருக்கடி

# வல்லரசு மாநாடு மீண்டும் ஆரம்பமாகிறது

நியுயோர்க், நவ. 29

**மேற்காஸிய நிலைமைகள்பற்றியும் அங்கு அமைதியை ஏற்படுத்துவது பற்றியும் வல்லரசு நாடுகள் மீண்டும்பேச்சு வார்த்தை ஆரம்பிக்கவிருக்கின்றன.**

மேற்காஸியாவில் அமைதி ஏற்படுத்துவது சம்பந்தமாக நான்கு வல்லரசுநாடுகளும் நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் கடந்த ஜூலை மாதத்துடன் முறிந்துபோயிருந்தன. இந்தப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இப்பொழுது அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நான்குவல்லரசுகளும்இணங்கியிருக்கின்றன. இந்தப் பேச்சுக்கள் அடுத்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

மேற்காஸியாவில் நிலைமை முன்னெப்போதையும் விட மோசமாகியிருக்கிறதுஎன்று ஐ. நா. வில் பிரிட்டிஷ் பிரதிநிதியாகவிருக்கும் கரடன் பிரபு கூறியிருக்கிறார். மேற்காஸியா சம்பந்தமாக ஐ. நா பாதுகாப்புசபை 1967ல் நிறைவேற்றிய தீர்மானத்தை எல்லாரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

மேற்காஸியா பற்றிய நான்கு வல்லரசு மகாநாடு அடுத்த செவ்வாய்க்கிழமை ஐ. நா கட்டிடத்தில் நடைபெறும் என்று ஐ நா. வில் அமெரிக்க தூதுகோஷ்டியின் அங்கத்தவர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

மேற்காஸியாவில் நேற்று தொடர்ந்து அரபு நாடுகளின் படைகளும் இஸ்ரேலிய துருப்புகளும் பல முனைகளில் மோதல்களில் ஈடுபட்டார்கள். ஐக்கிய அரபுக் குடியரசின் தென்பகுதியில் இஸ்ரேலியர் கடுமையான தாக்குதல் ஒன்றில் இறங்கினார்கள். இஸ்ரேலியர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்திவிட்டதாக அரபுக்குடியரசு அறிவித்தது.

பிரஞ்சு அமைச்சர் ஒருவர் அதிபர் நாஸருடன் ஆலோசனைகள் கலப்பதற்காக கெய்ரோவுக்கு விஜயம் செய்திருக்கிறார்.

# அணு ஆயுதபரவல் தடைக்கு மேற்கு ஜெர்மனி அங்கீகாரர்

மேற்குபெர்லின், நவ 29

அணுஆயுத பரவல் தடை பிரகடனத்தில் மேற்கு ஜெர்மன் அரசும் கையெழுத்திட்டிருக்கின்றது ஆனல் இந்த ஒப்பந்தத்தை மேற்கு ஜெர்மன் இன்னும் ஊர்ஜிதம் செய்யவில்லை, இந்த பிரகடனம் பற்றிய மேலும் சில அம்சங்கள் தெளிவாகும் வரை மேற்கு ஜெர்மன் இதனை ஊர்ஜிதம் செய்யாது என்று பிரதம மந்திரி திரு. வில்லி பிரான்ட் அறிவித்திருக்கிறார்

அணுஆயுதப் பரவல்தடை பிரகடனத்தில் மேற்குஜெர்மன் கையெழுத்திட்டிருப்பதை பிரிட்டன் வரவேற்றிருக்கின்றது. மேற்கு ஜெர்மனி அணுஆயுத உற்பத்தியில் இறங்கவிருப்பதாக கம்யூனிஸ்ட் நாடுகளில் ஏற்பட்டிருந்த கருத்து இதன்மூலம் மறையக்கூடும் என்று கருதப்படுகின்றது.

அணுஆயுதப் பரவல்தடை பிரகடனம் 43 நாடுகளினல் கையெழுத்திடப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டால் மட்டுமே நடைமுறை சாத்தியமாகும் இதுவரை அணுப் பகுதி நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டு ஊர்ஜிதம்செய்துள்ளன.

லஞ்சவழக்கு

## 6 மாத சிறை 2000 அபராதம்

சென்னை, நவ. 29

தமிழ்நாடு கல்வி சுகாதார மந்திரி இரா. நெடுஞ்செழியனுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டவழக்கில் எதிரிகளான திருவாளர்கள் ஆடலரசன், டாக்டர் நாகராஜன் ஆகியோருக்கும் 6 மாதம் சிறையும் 2000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## ஐ நா.தினம்

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் ஐக்கிய நாடுகள் சபைத்தினத்தை டிசம்பர் 8-ம் திகதி நெடுந்தீவு மாவித்தியாலயத்தில் கொண்டாடுவதெனை நெடுந்தீவுக் காரியாதிகாரி கந்தோரில் காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி தலைமையில் கூடிய ஐக்கிய நாடுகள்சபை கொண்டாட்டஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேடுந்தீவு கிராமமுன்னேற்றச்சங்கப் பிரதிநிதிகள் கிராமசேவையாளர்கள் மாவித்தியாலய அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் இம்முறை அநேகமாக கல்வி இலாகாவிலிருந்து ஒருவரை பிரதம பேச்சாளராக்கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது.

மைகல் கொலின்ஸ்

# அப்பல்லோ-11 வீரர் மந்திரியாகிறர்

நியூயோர்க், நவ. 29

விண்வெளி வீரர் கேணல் மைக்கல் கொலின்ஸ் அமெரிக்க பொது விவகார உதவி அமைச்சராக நியமிக்கப்படவிருக்கிருர்.

அதிபர் நிக்ஸன் இந்த நியமனத்தைச் செய்திருக்கிருர். இதனை அமெரிக்க செனட் அங்கீகரித்ததும் அவர் உதவி மந்திரியாவார்.

கேணல் கொலின்ஸ் அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பிய அப்பல்லோ-11 மூன்று வீரர்களில் ஒருவர். நீல் ஆம்ஸ்ட்ருேங்கும், எட்வின் ஆல்ட்ரினும் சந்திரத் தரையில் இறங்கிய பொழுது மைக்கல் கொலின்ஸ் தாய்க்கலமான கொலம்பியாவில் சந்திரனைச் சுற்றி வலம்வந்து கொண்டிருந்தார்.

இவர் விண்வெளி ஆராய்ச்சித்துறையில் தற்போது வகிக்கும்பதவியை ராஜினமா செய்துவிட்டு உதவிஅமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வார் என்று தெரிகின்றது.

## பஞ்சாப் மக்களுக்கு கருணாநிதியின் பாராட்டு

அமிர்தசரஸ், நவ. 29

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு அமிர்தசரஸ் நகரமண்டபம் வரவேற்பளித்து கௌரவித்தது. சீக்கியர்களின் மதத் தலைவர் குருநானக்கின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக திரு. கருணாநிதி இங்கு வந்திருக்கிறார்.

இந்த உபசாரத்தின்போது திரு கருணாநிதி பேசுகையில், சீக்கியர்களின் பொற்கோவிலைத் தரிசிப்பதற்காக இங்கு வந்தேன். அதேசமயம் அந்நியர் ஆதிக்கத்தின் போது துணிச்சலுடன் போரிட்டு நாட்டைக்காத்த வீரமக்களின் பொன்மயமான உள்ளங்களையும் கண்டேன்என்று குறிப்பிட்டார்.

சீக்கிய தலைவர் சன்ட் பத்தேசிங்கையும், திரு கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

# விடிவெள்ளி சினிமா வழக்கு தள்ளுபடி

சென்னை நவ.29

''மனித உள்ளம்'' என்ற தனதுகதையைதிருடி ''விடிவெள்ளி'' படத்தைதயாரித்ததாக கோவை எழுத்தாளர் திரு:சாமிநாதனுல் தயாரிப்பாளர் ஸ்ரீ தருக்கெதிராக கோவை மாவட்ட பெரிய கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஸ்ரீதருக்கு இவ்வழக்கு மூலம் ஏற்பட்ட செலவை சாமிநாதன் கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கத்திற்குசேரவேண்டியகோர்ட் செலவையும் கட்ட வேண்டும் என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில்

## செய்தித் துணுக்கு

### சாராயத்தில் விஷம்?

சாராயம் குடித்த ஆய்பாளத்தைச் சேர்ந்த மூன்று பேர் இறந்தார்கள். சாராயத்தில் விஷம் கலக்கப்பட்டிருந்ததா என்று பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

### அபராதமும் சிறையும்

14 லட்சம் மதிப்புள்ள தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த சென்னையைச் சேர்ந்த 6 பேரில் ஒருவருக்கு 6 மாத கடுங்காவல் சிறையும் 250 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. மற்றைய ஐவருக்கும் 9 மாதச் சிறையும் 250 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

### பொதுத் தேர்தல் வரவேண்டும்

மக்கள் தீர்ப்பை அறிய விரைவில் பொதுத்தேர்தல் வரவேண்டும் என்று திரு. காமராஜர் கூறினர்

### ஆதரவு கொடுப்போம்

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் செய்யும் நன்மையான காரியங்களுக்கு முழுஆதரவுகொடுப்போம் என்று திரு சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

### தலைவர் பதவி ஏறகமாட்டேன்

எனக்கு காங்கிரஸ் தலைவர் பதவி கொடுக்கப்பட்டால் நான் அதை ஏற்கமாட்டேன் என்று தமிழ்நாடு முன்னள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

### செருப்பைக் கழறறினர்

மேற்சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சோஷலிஸ்ட் உப்றுபினர் திரு. ராஜ்நாராயணுக்கும் இன்னுமோர் உறுப்பினருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து திரு. ராஜ்நாராயண் தன்னுடைய செருப்பைக் கழற்றி கையிலெடுத்துக்கொண்டு மற்றைய உறுப்பினரை வெருட்டினர்.

### மிஸ்ரா குறறச்சாட்டு

அகில இந்திய வானெலிக்கு விரோதமாக எதிர்ப்புணர்ச்சி வளர்ந்து வருகிறது என்று மிஸ்ரா குற்றஞ்சாட்டியுள்ளார்

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

# நாவலர் குருபூசை வானெலி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவலர் குருபூசை வாரத்தையொட்டி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் பின்வரும் சிறப்புநிகழ்ச்சிகள் ஒலிபரப்பும்.

டிசம்பர் முதலாம் திகதி காலை 6-35 - 6-40 நாவலர் சிந்தனை- மு. வைரவிப் பிள்ளை. 8-15 - 8-30 நாவலர் பெருமான் - பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை, 8-30 9-00 நாவலர்பெருமான், உருவச்சிலை நிறுவுதல்சம்பந்தமாகநடைபெற்ற பெருவிழாவின் தொகுப்புரை மறுஒலிபரப்பு.

உரையாடல்: காலை 10-30 11-00: நாவலர்பெருமானின் பலதரப்பட்ட சேவைகள்: நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை, குலசபாநாதன், பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, வித்வான் ந சுப்பையாபிள்ளை, ச. அம்பிகைபாகன்.

இரவு 7-35—8-00 நாவலர் பெருமான் உரைச்சித்திரம்.

6-12-69 - இரவு 7-34 — 8-00 நாவலர்பெருமான் உருவச்சிலைநிறுவுதல் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பெருவிழாவின் தொகுப்புரை.

ஆங்கில ஒலிபரப்புசேவையில் தேசிய உயர்கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா நாவலர் பற்றி அன்று இரவு7-30 தொடக்கம் 7-45 வரை சொற்பொழிவாற்றுவார்.

## 'சன்மானத்தின் பின்தான் சலுகைகள்'

ஊரதீவு. சனி

தமிழினத்திற்குச் சேவை செய்வோம் என்று சொல்லி வாக்குப்பெற்று ஆட்சிமன்றம் சென்ற பிரதிநிதிகள் முதலில் இனத்தின் நல்வாழ்வுக்காகவே உழைக்க வேண்டும். இனத்தின் தன்மானம் காப்பாற்றப்பட்ட பின்தான் சலுகைகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். யூதமக்கள் சலுகைகளைப் பற்றிச் சிந்தித்திருப்பார்களேயானல் இஸ்ரவேல் என்ற பலம் வாய்ந்த நாட்டை அவர்களால் உருவாக்கியிருக்கமுடியாது. அதேபோல இலங்கைத் தமிழினமும் சலுகைகளுக்காகச் சந்தர்ப்ப வாதிகளின் பின் செல்லாது 'தமிழ் ஈழம்' உருவாக உழைக்க வண்டும் பலனை எதிர்பாராது நமது கடமையைச் செய்யவேண்டும்.

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவரும் ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் நயினதீவு சந்தை மைதானத்தில் நடைபெற்ற கழகப் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். நயினதீவு கிராமசபையின் முன்னைநாள் தலைவர் முத்து-பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சமாதான நீதிபதி க. வே. பரமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

### ட்ராக்டரால் வீழ்ந்த வாலிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ட்ராக்டரைச் செலுத்திச் சென்ற 22 வயது வாலிபர் ஒருவர் தவறி வீழ்ந்ததால் நெரியுண்டு மரணமானர்.

சங்கரத்தையைச் சேர்ந்த குமாரசிங்கம் கோபாலசிங்கம் என்பவரே இவ்வாறு மரணமானர்.

டாக்டர் என். பத்மநாதன் இறந்தவரைப் பிரத பரிசோதனை செய்தார் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனதிராஜா விபத்துமரணம் என்று தீர்ப்பளித்தார். (கா. நி.)

### 'விடுதலை வேட்கை'

சுழிபுரம், சனி

பண்ணுகம் தெற்கைச் சேர்ந்த திரு. ஆ. சேயோன் எழுதிய 'விடுதலை வேட்கை' என்னும் நூலை அடுத்த மாதம் 3-ம் திகதி சுழிபுரம் கிராம சபை மண்டபத்தில் வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைப்பார்.

இளைப்பாறிய தந்திஇலாகா பொறியியலாளர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதர் ப. இராசகுரு வரவேற்புரை நிகழ்த்துவார்.

மனி அணுஆயுத உற்பத்தியில் இறங்கவிருப்பதாக கம்யூனிஸ்ட் நாடுகளில் ஏற்பட்டிருந்த கருத்து இதன்மூலம் மறையக்கூடும் என்று கருதப்படுகின்றது.

களான திருவாளர்கள் ஆடலரசன், டாக்டர் நாகராஜன் ஆகியோருக்கும் 6 மாதம் சிறையும் 2000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இம்முறை அநேகமாக கல்வி இலாகாவிலிருந்து ஒருவரை பிரதம பேச்சாளராக்கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது.

திரு. சாமிநாதனால் தயாரிப்பாளர் ஸ்ரீ தருக்கெதிராக கோவை மாவட்ட பெரிய கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு திற்குசேரவேண்டியகோர்ட் செலவையும் கட்ட வேண்டும் என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினர்.

# பாகிஸ்தானில் பொதுத்தேர்தல்

## அடுத்த வருடம் நடைபெறும்

டாக்கா, நவ. 27

பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் அடுத்தவருடம் அக்டோபர் மாதம் 5-ம் திகதி நடைபெறும் ஒரு நபருக்கு ஒருவாக்கு என்ற அடிப்படையில்தேசிய சட்டசபைக்கான தேர்தல் நடைபெறும் இந்தச் சபைகூடி நாட்டின் எதிர்கால அரசியல் திட்டத்தை உருவாக்கியபின்னர் பிராந்தியசட்டசபைக்கான தேர்தல்கள் நடைபெறும். அதுவரைக்கும் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி தொடர்ந்து இருந்து வரும்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாக்கான் நேற்று அறிவித்தார். தேசமக்களுக்கு விடுத்த செய்தியொன்றில் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் ஒற்றை ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்பது பற்றியும் யாஹ்யாக்கான் சூசகமாக அறிவித்தார்.

இப்போதுள்ள ஆட்சி முறைக்குப் பதிலாக வேறு பல முறைகளையும் அவர் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றம் அமைதியாக இடம் பெறவேண்டும் என்பதை அவர் வற்புறுத்தினர். தாம் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டநாள் முதல் மக்களிடம் ஆட்சியைத் திருப்பிக்கொடுப்பது பற்றி ஆலோசித்துவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரசியல்கட்சி நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்.

— —

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருநெல்வேலி மாதர் முன்னேற்றச் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திருமதியோகேஸ்வரி ஆலாலசுந்தரம், உபதலைவர்: செல்வி விமலாதேவி சோமசுந்தரம், செயலாளர்: செல்விஜெயகௌரி சிவஞானம், உபசெயலாளர்: திருமதி பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை, பொருளாளர்: திருமதி இராசலட்சுமி கார்த்திகேசு. நான்கு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரியப்பட்டது. (கா. நி)

## சங்கீத சபை

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் விநாயகர் கான சங்கீத சபையொன்று புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

இச்சபையின் புதிய தலைவராக டாக்டர் ரி. கெங்காதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். காரியக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது

## மே. வங்கா போராட்டம் நிற்காது

கல்கத்தா, நவ. 29

மேற்கு வங்கத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்காக முதன் மந்திரி திரு. அஜாய் முகர்ஜியின் தலைமையில் பெரிய எடுப்பில் பட்டினிப் போராட்டம் ஒன்றை நடத்த பாங்களாகாங்கிரஸ் முயற்சி எடுப்பதை நிறுத்தி வைப்பதற்கு மேற்கு வங்க கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. கூட்டணிக் கட்சிகள் தெரிவித்த யோசனைகளை ஏற்றுக்கொள்ள பாங்களா காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. சுசில் குமார் தாரா ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். அடுத்த மாதம் முதலாம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பமாகவிருக்கின்றது.

## இங்கு நடக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஆயுதங்கள் தாங்கிய கைகலப்பு' என்று 'ஈழநாடு' 28-11-69-ல் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சம்பவம் முஸ்லிம் பகுதியில் நடைபெறவில்லையென யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனுப் பஸீர் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானெலிக்கு விரோதமாக எதிர்ப்புணர்ச்சி வளர்ந்து வருகிறது என்று மிஸ்ரா குற்றஞ்சாட்டியுள்ளார்

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 28 வருடகாலமாக ஆசிரியராகக்கடமையாற்றிய திரு. வி. கார்த்திகேசு பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு இன்று மாலை கல்லூரி ஆசிரியர்கள் பிரியாவிடை உபசாரம் அளிக்கிறார்கள்.

(கா. நி)

கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். நயினாதீவு கிராமசபையின் முன்னைநாள் தலைவர் முத்து-பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சமாதான நீதிபதி க. வே. பரமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. வ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், ஒருவகையான விரக்திமனப்பான்மையும் எங்களுக்கே விமோசனமே இல்லையா என்ற கவலையும் தமிழ் மக்களைப் பீடித்திருக்கிறது என்று குறிப்பிட்டார்

மன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைப்பார்.

இளைப்பாறிய தந்திஇலாகா பொறியியலாளர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதர் ப. இராசகுரு வரவேற்புரை நிகழ்த்துவார். திரு. சு. கந்தசாமி, திரு. சண்முகநாதன், திரு. கா. வேல்முருகன், திரு. சி. சிவபாக்கியநாதன், திரு. செ. ஸ்ரீனிவாசன், திரு. மா. இராசையா, திரு. க. வாமதேவன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.




இலவசம்

ஒவ்வோர்

உஷா

தையல் மெசினுடனும்

பிரயாணப் பெட்டியோ மின்சார இஸ்திரிக்கைப் பெட்டியோ இனும். ரொக்கக் கொள்வனவுக்கும் தவணைக் கொள்வனவுக்கும் பேதமின்றி வழங்கப்படும்.





விரையுங்கள்!

- டி லூக்ஸ்
- பிறைமா
- பிரின்செஸ்
- ஸ்ட்ரீம்லைன்ட்

ஆகிய நான்கு தினுசுகளில் விரும்பிய மெசினைத் தேர்ந்தெடுங்கள்.

வெகுமதிகள் முடியும்வரை மட்டுமே இந்தச் சலுகை.





சிறந்ததை வாங்குங்கள் உஷா எல்லாவற்றிலும் சிறந்தது



பேகொன்

செறி திரவம்




வீட்டிற் சூழும்
மூட்டுப்பூச்சி,
கரப்பான்களை
முற்றுக அழிக்கும்

BAYER

செயல் வன்மை வாய்ந்த சிக்கனம் தரும் பேகொன் செறி திரவம் பூச்சிகளை மறைவிடத்திலிருந்து வெளியேற்றி அழிப்பதுடன், நீடிய காலம் நிலைத்திருந்து பூச்சிகளைக் கொல்லும்.

பேகொன் ஒரு பிரத்தியேக பேயர் தயாரிப்பு.
வாங்கக் கிடைப்பவற்றில் மிகச் சிறந்த பீடை நாசினி.

மூலப்பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர், ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்;
ஹேக்கெம் லிமிடெட்
400, டன்ஸ் வீதி; கொழும்பு 10.

விநியோகஸ்தர்கள்: கொழும்பு ஏஜன்சீஸ் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உயிர் வாழ்வதற்காகப் போராடுவதற்குப் பதிலாக பரஸ்பர சேவைக்காகப் போராடுவது மனிதனின் வெற்றியாகும். —மகாத்மா காந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 15-ந் திகதி (30-11-69)

## வேலைநிறுத்த ஆபத்து

இலங்கை ரயில்வே கார்டுகளும் டிரைவர்கள் முதலியவர்களும் சம்பள உயர்வு விஷயமாக வேலை நிறுத்தம் செய்யப்போகிறார்களாம். ஆனால் டிசம்பர் மாதம் முதல்திகதி நள்ளிரவிலிருந்து ரயில் வண்டிகள் ஓடாதென்று ஒருசெய்தி பொதுமக்களை பயமுறுத்துகிறது: பொதுமக்கள் தங்கள் அத்தியாவசிய போக்குவரத்து சேவைகளுக்கு ரயில் பஸ் முதலியவற்றையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள், எக்காரணம் பற்றியும் அச்சேவைகளுக்குத் தடை ஏற்பட்டு அவை நின்றுவிடுமாயின் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சங்கடங்களை விளக்கத் தேவையில்லை.

சம்பள உயர்வு விஷயமாக மேற்குறித்த ஊழியரின் கோரிக்கைகளுக்கு நிர்வாகம் செவிசாய்க்காமல் இருப்பதுதான் வேலை நிறுத்தத்துக்கான காரணமென்று சொல்லப்படுகின்றது. சம்பள நிர்ணயக் கமிஷன் இவர்களது சம்பள உயர்வு விஷயமாகச் செய்திருந்த சிபார்சு அமுல் செய்யாதிருப்பின் அதற்கு காரணமென்னஎன்பது தெரியவில்லை, சம்பந்தப்பட்ட சிப்பந்திகளின் கோரிக்கையில் நியாயம் இருப்பின் அதை இனியும் தயக்கமில்லாமல் நிறைவேற்ற வேண்டியது நிர்வாகத்தின் கடமையாகும், இது பற்றிய விபரங்கள் நமக்குத் தெரியவில்லை' இவை எப்படியிருப்பினும் பொதுமக்களின் அத்தியாவசிய சேவையைப் பாதிக்கும்படியாக யாரும் செய்யக்கூடாது.

இவ்வித வேலைநிறுத்தங்கள் நடப்பது இது முதல் தடவையல்ல, விலைவாசிகள் உயர்ந்துகொண்டு போவதுடன் வாழ்க்கை அந்தஸ்தும் கூடிக்கொண்டிருப்பதால் சம்பள ஊழியர்களுக்கு பெரிதும்சங்கடம்தான், அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்காவது திட்டமான சம்பளமும், சம உயர்வுகளும் படிச்செலவுகளும் கிடைக்கின்றன. தனியார்துறைகளில்

பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

வாழ்க்கைச் செலவுகளும் சம்பளங்களும் போட்டி போட்டுக்கொண்டு அதிகரிக்குமாயின் மற்றப் பொதுமக்கள் வேலையற்றோர் இவர்களின் கஷ்டம் பெரிதும் அதிகரிக்கும். இவ்வித விஷயங்களில் பொதுமக்களின் நன்மையைக் கருதி சம்பளங்களை உயர்த்திக் கொண்டே போவதைவிட்டு வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்கஎல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுப்பதுதான் நிரந்தரமான பலன் அளிப்பதாக இருக்கும்,

பெரிய நிர்வாகப் பதவிகளில் இருக்கும் அதிகாரிகளுக்கு வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்தில் மிக அதிகமான சம்பளம் சுயநல நோக்கத்துடன் அளித்து வந்தனர். மற்றச் சிப்பந்திகளின் சம்பளங்களுடன் ஒப்பிடுகையில் இது மலைக்கும் மடுவுக்கும் போலாகும். நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் கூடபெரிய அதிகாரிகளின் சம்பளங்கள் அப்படியே இருக்கின்றன. சில சமயம் கூடியுமுள்ளது. சம்பளங்கள் மக்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதுடன் அவற்றுக்குள் பெரும் வேற்றுமை இருப்பது நியாயமல்ல. பெரிய அதிகாரிகளுக்கு அதிக சம்பளம் இருப்பதாயின் மற்றவர்களும் மேன்மேலும் அதிகம் கேட்க அது தூண்டுவதாகவுமுள்ளது. இதுவரை வேலையிலுள்ளவர்களை பாதிக்காமல் இனி வேலைக்கு வரும்பெரிய அதிகாரிகளின் சம்பளத்தை நியாயமான அளவுக்கு குறைப்பது பல விதங்களிலும் நல்லது. பணமில்லாத காரணத்தாலும் ஒரு சாரினருக்கு சம்பளம் கூட்டினால் மற்றவர்களும் கேட்பர். வரவரச் சம்பளச் செலவுகள் உயர்ந்து கொண்டே போவதாயின் அரசாங்கம் உள்ளிட்டு தனியார் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் அதிக கஷ்டமேற்படுமாதலால் இவ்விஷயத்தில் புரட்சிகரமான தீவிர நடவ

# வெள்ளி விழாக் காணும் அல்பேனிய மக்கள்

சின்னஞ்சிறு அல்பேனியாவின் வீரம் செறிந்த மக்கள் தமது தந்தையர் நாட்டின் 25வது விடுதலைத் தினத்தை நாளை கொண்டாடுகின்றனர். இத்தினம் அல்பேனிய மக்களுக்கு மட்டுமல்லாது உலகனைத்திலுமுள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட மக்களுக்கும், ஒரு குதூகலமான தினமாகும்.

இலங்கையிலுள்ள நாம் அல்பேனியாவின் வரலாற்றைச் சரிவர அறிந்துகொள்வது ஒரு புதியபரம்பரையை புதியதோர் நாகரீகத்தை புதிய சமுதாயத்தை உருவாக்கியுள்ள வரலாற்றை அறிந்துகொள்வதாகும். அல்பேனிய மக்களின் விடுதலைப் போராட்டம் அந்த நாட்டின் வரலாற்றிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாகும். அதன் வரலாறே போராட்டம் தான். அல்பேனிய நாட்டு மக்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக சுதந்திரத்திற்காகவும், சுயாதிபத்தியத்திற்காகவும் கடுமையான — உறுதியான போராட்டங்கள் நடத்தியுள்ளனர். வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளரையும் உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளையும் தேசத் துரோகிகளையும் எதிர்த்த போராட்டங்களில் புடம்போட்டு எடுக்கப்பட்டவர்களாவர்.

அல்பேனிய மக்களின் வீரமிக்க புரட்சிகரப் போராட்

வும் கடுமையானதான பாஸிஸ ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான இந்த மகத்தான போராட்டத்தில்— விடுதலை இயக்கத்தின் சக்கரங்களின் சுழற்சியின் வேகத்தைத் தடுத்து இழுத்து நிறுத்த முற்பட்ட உள்ளூர் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ தேசத்துரோகிகள் நெரிபட்டுச் சிதறுப்பட்டனர்.

1940ம் ஆண்டைய காலத்தில் அல்பேனியர்கள் விடுதலைப் போராட்டம் நடத்து

ஒரு தனிநபர் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைச் சொந்தமாக்குவதை நிலத்திற்கு வழி இல்லாது குடியிருக்க வீடில்லாது மக்கள் எதிர்த்தால் குறைந்த ஊதியத்திற்கு தமது உடலுழைப்பை விற்க மறுத்தால் தமது அத்தியாவசியதேவைகளுக்காக கூடிய ஊதியம் கேட்டால் அத்தியாசிவயப் பொருட்களின் விலையைக் குறைக்க கோரினால் அது நியாயம் என்று சொல்லப்

என்று கூறிக் கையை விரித்த பொழுது இதனை கபடமான ஆலோசனை என்று தெரிந்து அல்பேனியத் தோழர்கள் தமது சுயஆதாரத்தில் நம்பிக்கை வைத்து மலைகளைத் தாமே நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்குக் குடைந்து ஸ்டாலின் ஹைட்ரோ எலக்றிக் பவர்ஸ்டேசன் நீர்ப்பாசன அமைப்பிற்குபெரும் வெற்றியை ஈட்டினர்.

அல்பேனியாவில் பெட்ரோலியம் இல்லையென்று அடித்துக்கூறிச் சென்றனர் சோவியத்நிபுணர்கள். எங்கு எங்கு பெட்ரோலியம் இல்லையென்று சோவியத் நிபுணர்கள் கூறினார்களோ அதே இடங்களில் தமது சுய ஆதாரத்தின் மூலம் எண்ணைக் கிணறுகளைத் தோண்டி எண்ணை ஊற்றுக்களைக் கண்டுபிடித்ததன் மூலம் தமது திறமையை வெளிப்படுத்தினர்.

பல்கிசா என்ற இடத்தில் குரோமியம் இல்லையென்று சோவியத்நிபுணர்கள் கூறிச் சென்றனர். இதனை நம்பாது தமது சுயாதாரத்தில் நின்று குரோமியத்தைக் கண்டுபிடித்ததோடு அந்தப் பிராந்தியத்தை குரோமியம் உற்பத்திப்பிராந்தியமாக மாற்றியதுடன் இன்று உலகச் சந்தையில் மிகவும் வேண்டப்படும் குரோமியத்தை அவர்கள் ஏற்றுமதி செய்கின்றனர்.

— ஏ. சின்னத்தம்பி —

கையில் சோவியத் செஞ்சேனை ஹிட்லர் பாஸிஸத்தைத் தோற்கடிக்க கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியளித்துக்கொண்டிருந்தனஎன்பது நினைவுகொள்ள வேண்டியதாகும். அன்று மகத்தான தலைவரும் சிறந்த மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட்டுமான தோழர் ஜோசப் ஸ்டாலின் தலைமையிலிருந்த மகத்தான சோவியத் யூனியனால் அல்பேனிய மக்கள் ஆகர்ஷிக்கப்பட்டு அதனிடம் பல்வேறு உதவிகளையும் பாடங்களையும் பெற்றபோதிலும் சக்திமிக்க செஞ்சேனை பாஸிஸத்திலிருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விடுவிக்கத் துணைபுரிந்த காலத்தில் அல்பேனியாவின் உதவிக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்

படுகிறது. அடக்குமுறை கையாளப்படுகிறது. எதிர்ப்பது தவறு என்றும் கூறப்படுகிறது. இந்த மோசடியை வஞ்சனையை அல்பேனியா தகர்த்தெறிந்துவிட்டது. மகத்தான சோஸலிச சீனாவைப் போன்று அல்பேனியாவில் வெகுஜன மக்கள்தான் சகலவற்றினதும் சொந்தக் காரர்களல்லாமல் ஒரு சிலரல்லர். அங்கு மக்களைச் சுரண்டுவது சட்டவிரோதம். தேசத்துரோகம் எனக் கொள்ளப்படுகிறது- முதலாளித்துவ உலகிலுள்ள ஒருசில கொடுமைக்காரர்கள் அரசு அதிகாரத்தை வைத்துக்கொண்டு மக்களைச் சுரண்டி கொள்ளையடிக்கவும் அடக்கி ஒடுக்கவும் சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். மக்களுக்கு ஏன் என்று

## புதிய நாகரிகத்தையும் சமுதாயத்தையும் அமைக்கின்றனர்

டங்களும் புரட்சிகர உணர்வும் வானளாவி நிற்கின்றன. மகிமை வாய்ந்தவையாய் இருக்கின்றன.

15ம் நூற்றாண்டில் அல்பேனிய மக்கள் 25 வருடங்களுக்கு மேலாக—தொடர்ச்சியாகத் தமது மகத்தான தேசீய விடுதலை வீரரான ஸ்கந்தபேக்கின் தலைமையில் துருக்கிய ஆக்கிரமிப்பை எதிர்த்து வீரமிக்க போராட்டம் நடத்தியுள்ளனர், முதலாவது உலக யுத்த காலத்தில் தம்மைஅடிமைகொள்ள நினைத்த இத்தாலிய கிரேக்க யுகோஸ்லாவிய ஆக்கிரமிப்

படவில்லை. அல்பேனிய மக்கள் அதற்கிடையில் தாமாகவே தமது நாட்டை விடுவித்துக்கொண்டனர்.

அல்பேனியா எமது நாட்டைப்போன்ற ஒரு சிறிய நாடாகும். விடுதலைக்கு முன் அது ஐரோப்பாவின் மிகவும் பின்தங்கிய விவசாயநாடாக இருந்தது. எந்த ஒரு துறையிலும் அது முன்னேறி இருக்கவில்லை: விவசாயம், தொழில் உற்பத்தி கல்வி போன்[illegible] பின் த[illegible] ஒரு குண்டூசிக்குக்கூட அண்ணார்ந்து பார்க்கக்கொண்

கேட்கவோ எதிர்த்து நிற்கவோ உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அல்பேனியாவில் நிலமை இதற்கு நேர் மாறானதாகும். அங்கு சுரண்டுவதற்கு சுதந்திரம்எவருக்கும் இல்லை.

முதலாளிவர்க்கம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கையில் ஜனநாயகமும் சுதந்திரமும் சுரண்டிவாழும் அநியாயக்காரர்களுக்குத்தான் உண்டு வெகுஜனங்களுக்கு அதா[illegible]தொழிலாளர் விவசா[illegible]கள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகமும் இல்லை சுதந்திரமும் இல்லை-

அல்பேனியாபுகழ்வாய்ந்த மாக்ஸிஸ லெனினிஸ செம்பதாகையை உறுதியுடன் உயர்த்திப்பிடிப்பதனால்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தி அதனை ஸ்திரப்படுத்தியதனால்தான் இன்று அல்பேனியா சக்திவாய்ந்த சோசலிஸ நாடாக தன்னை ஆக்கிரமிக்க முனவரும் எவரையும் எதிர்த்து நிற்கும் சக்திபெற்றுள்ளது.

மகத்தான அல்பேனிய தொழிற்கட்சியைப்போன்ற மாக்ஸிஸ லெனினிஸக் கட்சி

## ஐயாறன் எழுதுவது..

இம்முறை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் நடாத்திய கட்டுரைப்போட்டியிலே முதல் மூன்று பரிசுகளையும் மூன்று மாணவிகளே பெற்றிருக்கிறார்கள். கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஜெகதாம்பாள், யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம. மகாவித்தியாலய மாணவி செல்வி தேவகுஞ்சராம்பாள் ஜெகராசா, நாவலப்பிட்டி அந்திரய மகளிர் ம வி. யைச் சேர்ந்த செல்வி பிருந்தாவும் இப்பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இவர்களைத்தவிர வேறு பத்து பேர்களுக்கும் பரிசு கிடைத்துள்ளது. பரிசுபெற்றவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் அவர்கள் கல்வி கற்கும் பள்ளிக்கூடங்களையும் நாம் பாராட்டுகின்றோம்.

0 0 0

இப்போட்டியிலே கொழும்பு சர்வகலாசாலை போதனாகழகத்தைச்சேர்ந்த செல்வன் எம். எஸ் முகமது என்ற முஸ்லிம் மாணவர் பாராட்டுப்பரிசு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்விஷயத்தில் சமயவேற்றுமை காட்டாமல் பல சமய மாணவர்களும் கலந்துகொண்டது மகிழ்ச்சியளிக்கும் வரவேற்கத்தக்க விஷயமாகும்.

நாட்டிலுள்ள நூற்றுக்கும் அதிகமான கல்விக்கூடங்களிலிருந்து மாணவமாணவிகள் கலந்துகொண்டிருக்கிறார்களாம். அடுத்தமுறை இன்னும் அதிகமானவர்கள் இதில் பங்குபற்றுவரென்று நம்புவோம்.

நாவலரைப்போன்ற பெரியார்கள் ஒருசமயமக்களுக்கு மட்டுமன்றி நாடனைத்துக்கும், உலகனைத்துக்குமே உரியவர்கள் தனக்கென வாழாமல் பிறக்குரியாளராக வாழ்ந்த உத்தமர்கள். அவ்வித அவதார புருஷர்களின் வாக்குகள் நமக்கு நல்வழிகாட்டி, நல்வாழ்வை மேம்படுத்தக் காத்துள்ளன.

இதே இதழிலே, ''நாவலரும் சாதிவேற்றுமையும்' என்பதுபற்றி திரு. செ. வேலாயுதபிள்ளை எழுதியுள்ள கட்டுரையில், பிறப்பால் சாதி உயர்வு தாழ்வுகளை நாவலர் பெருமான் ஆதரிக்கவில்லை என்றும், ஒழுக்ம், ஆசார அனுஷ்டானத்தாலேயே உயர்வு தாழ்வு ஏற்படுமென்றும், அவர் கூறியுள்ளதைப்பற்றி ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

''சாதியினும் சமயமே அதிகம். சமயத்தினும் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி. யுக்தி, அனுபவம் மூன்றுக்கும் முழுமையும் விரோதம்...'' என்கிறார் இப்படிக் கூறியுள்ள நாவலர் பெருமானை ''சாதிவெறியர்'' என்று பழிப்பதுபெரும் பாதகமாகுமென்று சரியாகக் கூறுகிறார் பிள்ளை அவர்கள்.

நாவலர் பெருமான் தமது குருபூசை நாளில் மறு உலகிலிருந்து வெளியிட்டுள்ள ஒரு விசேஷ ஆசிச் செய்தி நாளை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகின்றது.

0 0 0

செல்வி மல்லிகா சிற்றம்பலம் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், ஆவி உலகப் பேச்சைத்தாம் நம்புவாகவும், ஆனால் மறுபிறவி எடுத்தவர்கள் பேசமுடியுமா என்றும் கேட்கின்றார்.

மதுரை குருமகா சந்நிதானமவர்கள் இது பற்றி எழுதியுள்ள நூலில், மறுபிறவி எடுப்பவர்களுடன் பேச முடியாதென்றும், ஆவி உலகில் ஒருவர் இருக்கும் காலம் அவரவர் செய்த வினைப் பயனைப் பொறுத்துள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

0 0 0

இரப்பவர்க்கீய வைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார்,
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்,
பரப்பு நீர் கங்கை தன்னைப் பார்சடைப்பாகம் வைத்தார்,
அரக்கனுக்கருளும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே.

—அப்பர் அடிகள்.

## சிவன் அடியார் கார்த்திகேசு மாஸ்டர்

— செ. இரத்தினசபாபதி —



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டன் வாழ்க்கை அந்தஸ்தும் கூடிக்கொண்டிருப்பதால் சம்பள ஊழியர்களுக்கு பெரிதும்சங்கடம்தான், அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்காவது திட்டமான சம்பளமும், சம உயர்வுகளும் படிச் செலவுகளும் கிடைக்கின்றன. தனியார்துறைகளில் வேலைசெய்யும் சம்பள ஊழியர்களுக்கு இவ் விஷயமாக எவ்வித சட்டப் பாதுகாப்புகளும் இல்லை. பெரிய குடும்பப் பொறுப்புள்ள தனியார் ஸ்தாபன ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் அரசாங்கசிப்பந்திகளை அதிர்ஷ்டசாலிகளென்றேகருதவேண்டும். சம்பள சிப்பந்திகளுள்ளிட்டு எல்லாப் பொதுமக்களுக்கும் நியாயம் கிடைக்கப்

ஞல் மற்றவர்களும் கேட்பர். வரவரச் சம்பளச் செலவுகள் உயர்ந்து கொண்டே போவதபின் அரசாங்கம் உள்ளிட்டு தனியார் துறையினருக்கும் பொதுமக்களுக்கும் அதிக கஷ்டமேற்படுமாதலால் இவ்விஷயத்தில் புரட்சிகரமான தீவிர நடவடிக்கை எடுக்க தக்கவர்களை கொண்ட ஒரு விசாரணைக் கமிஷனை காலம் தாழ்த்தாமல் அரசாங்கம் நியமிக்க வேண்டும். அதற்கிடையே ரயில்வே வேலைநிறுத்தம் ஏற்படாமலும் பொதுமக்களுக்கு வீண் சங்கடங்கள்ஏற்படாமலும் அரசாங்கம் ஊழியர்கள் இவ்விருசாராரும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## லஞ்ச ஒழிப்பு

தமிழ்நாடு கல்வி, சுகாதார அமைச்சர் இரா. நெடுஞ்செழியனுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருககு தலா ஆறுமாதச் சிறைத்தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து சென்னை நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருக்கிறது. இது லஞ்சம் கொடுக்க முனைபவர்களுக்கு நல்ல படிப்பினையாக இருப்பதுடன் லஞ்ச ஊழலைத் தடுப்பதற்கும் உதவுவதாக இருக்கும்.

லஞ்சம் கொடுப்பவர் இருப்பதால்தான் லஞ்சம் வாங்குபவர்களும் இருக்கிறார்கள். லஞ்சம் வாங்ககூடாது என்று உறுதியுடனிருப்பவர்களும் கூட சந்தர்ப்பசூழ்நிலைகளாலும் லஞ்சம் கொடுப்பவர்களாலும் உறுதியைத் தளர விட்டுவிடுகிறார்கள்.

சென்னை மருத்துவக்கல்லூரியில் ஒரு மாணவனுக்கு இடம்பிடித்துத்தருமாறும் இதற்குப் பிரதிபலனாக ஐயாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுக்க முன்வந்ததாகவும் குறிப்பிட்ட இருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. தகுதியிருந்தும் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல்போகும் மாணவர்களும், தகுதியிருந்தும் வேலைவாய்ப்புக் கிடைக்காமல்போகும் இளைஞர்களும் அரசாங்க இலாகாக்களில் நிலவும் அசட்டையும் அசமந்தமும் லஞ்சம் கொடுத்தாவது காரியத்தைச் சாதிப்போம் என்ற மனப்பான்மையை ஏற்படுத்திவிடுகிறது. நிர்வாகத்தைச் சீராக்கினால் அந்தந்தப் பொறுப்பிலுள்ளவர்களும் தங்கள் கடமையைச் செவ்வனேசெய்தால் லஞ்சம் கொடுக்கவோ, வாங்கவோ அவசியம் நேராது.

லஞ்சம் கொடுக்க முன்வந்த இருவரையும் திரு. நெடுஞ்செழியனே பொலிசாரிடம் ஒப்படைத்ததுடன் விசாரணையின்போது சாட்சியமும் அளித்தார். அவரது நேர்மையைப் பாராட்டவேண்டும். இதேசமயம் இது லஞ்சம் கொடுக்க நினைப்பவர்களுக்கும் ஒரு முன்னெச்சரிக்கையாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டுச் சம்பவம் நமது நாட்டுக்குப் பொருந்தும். இங்கும் லஞ்ச ஊழல்களை ஒழிக்க அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் வழிகாட்ட முன்வரவேண்டும்.

### தேவை

அனுபவமுள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் உடனடியாகத் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தேசிய விடுதலை வீரரான ஸ்கந்தபேக்கின் தலைமையில் துருக்கிய ஆக்கிரமிப்பை எதிர்த்து வீரமிக்க போராட்டம் நடத்தியுள்ளனர், முதலாவது உலக யுத்த காலத்தில் தம்மைஅடிமைகொள்ள நினைத்த இத்தாலிய கிரேக்க யூகோஸ்லாவிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடினர். 1920 அல்பேனிய மக்கள் இத்தாலிய ஆக்கிரமிப்பாளரைத் தமது நாட்டை விட்டுத் துரத்தியடிப்பதில் வெற்றிகொண்டனர் இவ்வாருகத் தம்மை எதிர்த்துவந்த சகலரையும் வெற்றிகொண்டனர் என்றபோதிலும் காலத்திற்குக் காலம் அதிகாரத்திற்கு வந்தவர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணிந்து நாட்டைக் காட்டிக்கொடுத்து வந்ததன் விளைவாக அவர்களால் தமது சுயாதிபத்தியத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்றமுடியவில்லை முந்திய போராட்ட காலங்களில் உறுதியான --கட்டுப்பாடுள்ள அரசியல் தலைமை --போராடும் மக்களுடைய தலைமை இல்லாதிருந்ததே இதற்குக் காரணமாகும். பின்பு இதனை அவர்கள் உணர்ந்தனர்.

1941ம் ஆண்டு அல்பேனிய மக்களின் அன்புக்கும் மதிப்புக்குமுரிய தலைசிறந்த மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்டான தோழர் அன்வர் ஹோஷாவின் மதிப்பிடற்கரிய தலைமையின்கீழ் அல்பேனியத் தொழிற்கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி) உருவாக்கப்பட்டபின், மக்கள் போராட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்து அந்நாட்டு மக்களின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றியது. தேசிய விடுதலைக்கான ஒரு துரிதமான இயக்கம் நாட்டின் மூலைமுடுக்குகளெல்லாம் பரவியது. அதன்மூலம் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் வெடித்தன. தோழர் அன்வர் ஹோஷாவினதும், அல்பேனியத் தொழிற்கட்சியினதும் தலைமையில் அல்பேனிய மக்கள் தொடர்ச்சியான உறுதிமிக்க ஆயுதப்போராட்டத்தின் மூலம் ஜெர்மன் இத்தாலிய பாஸிஸ ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியடித்து 1944ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ந் திகதி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதாவது கம்யூனிஸ்ட்கட்சி உருவாகி மூன்ருண்டுக் காலத்தில் உண்மையான தேசிய சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் வென்றெடுத்தனர். முன்னைய போராட்டங்களிலும் மிக

பின்தங்கிய விவசாயநாடாக இருந்தது. எந்த ஒரு துறையிலும் அது முன்னேறி இருக்கவில்லை. விவசாயம், தொழில் உற்பத்தி கல்வி போன்றவற்றில் மிகவும் பின்தங்கியதாக இருந்தது' ஒரு குண்டூசிக்குக்கூட அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருந்தது. விடுதலைக்குமுன் ஆக 25 டிராக்டர்கள்தான் முழு அல்போனியாவிலும் இருந்தனவென்ருல் அதன் பின்தங்கியநிலைமைதான் எவ்வளவு?

பழையனவற்றின் மிச்சசொச்சங்களைப் பூராகத் துடைத்து எறிந்து அல்பேனிய மக்கள் இன்று சுய ஆதாரத்துடனும் கடுமையான உழைப்பினுலும் ஒருபுறத்தில் உற்பத்தி மறுபுறத்தில் தேசப்பாதுகாப்பு என்ற கோட்பாட்டின்படி ஒரு கையில் பிக்கானும் மறுகையில் துப்பாக்கியுமாக தமது நாட்டை முன்னேறிய சோசலிஸ நாடாக ஆக்கிவருகின்றனர். அன்று ஒருநாள் பின்தங்கியநாடாக இருந்த அல்பேனியா இன்று எந்தக் கஷ்டத்தையும் இன்னலையும் கண்டு அஞ்சாத மக்களைக்கொண்ட புதிய பூமியாக விளங்குகின்றது. மாக்ஸிஸ லெனிஸத்திற்கு விசுவாசமாக அல்பேனிய தொழிற்கட்சியின் தலைமையில் அவர்கள் வியப்பிற்குரிய முறையில் தமது வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கின்றனர். தமது சமுதாயத்தை மாற்றிஅமைக்கின்றனர். சுயநலத்தை மறந்த பொதுநலத்தையே நாடுகின்ற மக்களைக்கொண்ட தனிப்பட்ட அபிலாசைகளை மறந்து கூட்டுறவு நலன்கருதிய மக்களைக் கொண்ட புதியதோர் சமுதாயத்தையும் நாகரீகத்தையும் தோற்றுவிக்கின்றனர். சகல முதலாளித்துவ வேலைமுறைகளையும் சிந்தனைகளையும் சித்தாந்தங்களையும் சுக்குநூருககுகின்றனர்.

முதலாளித்துவ நாடுகளில் எமது நாட்டிலுங்கூட ஒரு தனிநபர் ஆயிரக்கணக்கான நிலங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். குறைந்த கூலிக்கு கடுமையாகவருத்தி வேலை வாங்கலாம். தனது பொருட்களை உயர்ந்த கொள்ளை விலைக்கு விற்கலாம். மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்கிச் செல்வந்தராகலாம் என்று கூறப்படுகிறது. சுருக்கமாகச்சொன்னுல் இங்கெல்லாம் பொதுமக்களைச் சுரண்டுவது அடக்கி ஒடுக்குவது அடிமைப்படுத்துவது நியாயம் என்றும் அது தனிமனித சுதந்திரம் என்றும் கூறப்படுகிறது.

அதிகாரத்தில் இருக்கையில் ஜனநாயகமும் சுதந்திரமும் சுரண்டிவாழும் அநியாயக்காரர்களுக்குத்தான் உண்டு வெகுஜனங்களுக்கு அதாவது தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகமும் இல்லை சுதந்திரமும் இல்லை- பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியபின் ஜனநாயகமும் சுதந்திரமும் ஜனத்தொகையில் ஐந்து சதவிகிதமான சுரண்டுகின்ற அநியாயகாரர்களுக்கல்லாது மக்களுக்குக் கொடுக்கப்படும். இது அரசியல் அதிகாரம் யார்கையில்? முதலாளி வர்க்கத்தின் கையிலா? தொழிலாளி வர்க்கத்தின் கையிலா? என்பதையே பொறுத்திருக்கிறது அல்பேனியாவின் கடந்த 25 வருட வரலாறு இதனைத் தெளிவாக எடுத்துககாட்டுகிறது.

உலகின் ஏனைய மக்கள் சுதந்திரத்திற்காகவும் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் எதிராகப் போராடுகையில் அவர்களை ஆதரிப்பது தமது சர்வதேச கடமையென அல்பேனியாவும் தோழர் அன்வர் ஹோஷாவின் தலைமையிலான தொழிற்கட்சியும் கருதுகின்றன,

''எமது மக்கள் என்றுமே எதிரிகளின் பயமுறுத்தல்களுக்கு அடி பணியவில்லை. கஷ்டங்களையும் இன்னல்களையும் கண்டு மனம் தளரவில்லை. பாஸிஸ ஆக்கிரமிப்பாளர், துரோகிகள், கொலைகாரர்கள், வழி தவறியவர்கள் சதிகாரர்கள் ஆகியோர்கள் முன் எமது மக்கள் என்றுமே தலைகுனிந்ததுமில்லை, மண்டியிட்டதுமில்லை. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் முன்னே, டிட்டோவிய, குருசேவ்விய திரிபுவாதிகள் முன்னே எமது மக்கள் தலைகுனிந்தது மில்லை, மண்டியிட்டது மில்லை. என்றுமே அவர்கள் அட்டூழியங்கள், பட்டினி, காட்டிக்கொடுப்பு இவற்றைக் கண்டு அஞ்சியதுமில்லை, மனமுடைந்ததுமில்லை. ஏமாற்றப்பட்டதுமில்லை. என்றும் அவர்கள் துணிவுடன் முன்னேறிச் சென்றுள்ளனர். வருங்காலத்திலும் துணிவுடன் முன்னேறிச் செல்வர்'' என்று தோழர் அன்வர் ஹோஷா கூறியது வரலாற்றின் பாடங்களே.

அல்பேனியாவில் இருந்த சோவியத் நிபுணர்கள் அல்பேனியத் தோழர்களைப் பார்த்து 'கிரெருங்ஞ்சி மலைகளைக் குடைவது முடியாத காரியம் அது வீண் முயற்சி

அல்பேனியா சக்திவாய்ந்த சோசலிஸ நாடாக தன்னை ஆக்கிரமிக்க முனவரும் எவரையும் எதிர்த்து நிற்கும் சக்திபெற்றுள்ளது.

மகத்தான அல்பேனிய தொழிற்கட்சியைப்போன்ற மாக்ஸிஸ லெனினிஸக் கட்சியின் தலைமையிலுள்ள மக்கள், எவ்வளவு சிறிய நாட்டை உடையவர்களாக இருந்தாலும்சரி, எவ்வளவு சக்திவாய்ந்த எதிரியையும் துச்சமாக மதித்து சுய ஆதாரத்துடன் நிற்கமுடியும் வாழமுடியும் என்பதற்கு சிறிய ஆனுல் வீரமிக்க அல்பேனியா உலகமக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மகிழ்ச்சிக்குரிய இச் சந்தர்ப்பத்தில் மகத்தான அல்பேனிய தொழிற்கட்சியையும் அதன் அன்பிற்கும் மதிப்பிற்கும்உரிய தலைவர், தலைசிறந்த புரட்சிவாதியும் மாக்ஸிஸ்ட் லெனிஸ்டுமான தோழர் அன்வர் ஹோஷா அவர்களையும் வீரமிக்க அல்பேனிய மக்களையும் தலைவர் மா ஓ அவர்களின் பின்வரும் வார்த்தைகளில் வாழ்த்துவோமாக.

''நீங்கள் அஞ்சாநெஞ்சம் படைத்த பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகள். ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் உலகின் கொடுங்கோன்மைவாய்ந்த எதிரிகளையும் எதிர்த்துப் போராடுகின்ற செயல்வீரர்கள்''.

வீரமிக்க மக்கள் அல்பேனியா ஐரோப்பாவின் சோசலிஸ கலங்கரைவிளக்கம் ஆகிவிட்டது''.

## புதிய வகுப்புக்கள்

பருத்தித்துறை, சனி

அடுத்தாண்டு ஆரம்பத்திலிருந்து வதிரி ரேமன் கத்தோலிக்க பாடசாலையில் 6-ம், 7-ம் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

(8-ம் கலத் தொடர்ச்சி)

வருட ஆசிரியச் சேவை பூண்டு அதில் வித்தியாலயத்தில் இருபத்தேழாண்டையும் பணிக்காக்கினர் இப்பொழுது தமது அறுபது ஆண்டுகளையும் பூர்த்தியாக்கி 28-11-69ல் ஓய்வு பெற்றுவிட்டார்கள் இன்றைய விழா இவர் சேவை நலத்தைக் கலங்கரை விளக்கப்போல் யாவருக்கும் தெள்ளிதில் விளக்குகிறது இவர் ஆசிரிய சேவையினின்றும் ஓய்வு பெற்றுலும் இவரது நற்சேவை மகேஸ்வரனுக்கும், மக்களுக்கும் நன்கு கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

# சிவன் அடியார்

## கார்த்திகேசு மாஸ்டர்

— செ. இரத்தினசபாபதி —



யாழ்ப்பாணக் குடாநாட்டிலே திருவாளர் கார்த்திகேசு ஆசிரியரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. எந்தத் துறையிலுள்ளவர்களையும் கவரக்கூடிய எளிமையான வாழ்க்கையும், சேவை மனங்கனிந்த உள்ளமும் உள்ள இவர் என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற கொள்கையுடையவர். இம் முதுமொழிக்கிணங்க கார்த்திகேச அவர்கள் நாற்பது வருடச் சேவைக் காலத்தில் இருபத்தேழு வருட காலம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நல்லாசிரியனுய்க் கடமையாற்றியுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அல்வாயூரில் 1909-ம் வருடம் பிறந்த இவர் தமது கல்வியைக் ஹாட்லிக்கல்லூரியில் பெற்ருர். மாணவப் பருவத்திலேமிகவும் சுறுசுறுப்பான மாணவனுக இருந்த இவர் கல்வி, விளையாட்டு, புறக்கிருத்திய வேலைகள் ஆகியவற்றில் முதலிடம் பெற்றமை ஓர் வியப்பில்லை.

1929-ம் வருடம் புரட்டாதி மாதம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சேர்ந்தார். வாலிப பருவத்திலேயே மேற்படி வித்தியாலயத்தில் நல்லாசானுகத் திகழ்ந்தார். ஆங்கிலம், கணிதம், சமயம் உட்பட எல்லாப் பாடங்களையும் திறம்படப் புகட்டுமிவர் விளையாட்டுத் துறையிலும் மாணவரைஊக்கப்படுத்தி விளையாட்டுத்துறை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சமயத் துறையில் இவர் செய்த சேவைக்கு இவரே நிகர் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையில் நிர்வாக உறுப்பினராகக் கடமையாற்றி அவர்களால் நடாத்தப்படும் எந்தப் பொது விழாவிலும் அரும்பாடுபட்டு உழைத்தவர் எவ்விழாவையும் முன்னணியில் நின்று திறம்பட இயக்குவிப்பர் பாடசாலை வாழ்க்கையில் ஒவ்வொரு மாணவனினதும் உற்ற துணைவனுகவும் உதவி புரிந்துள்ளார்

(6-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org